<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| அ.வ.எண். | 292/2014 | சாட்சி | பி.வா.சா.1 |
|---|---|---|---|
| பெயர் | மாரியப்பன் | நாள் | 29.04.2024 |
| தகப்பனார் பெயர் | ஆறுமுகம் | | |

**<u>வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:-</u>**

1) 2ம் பிரதிவாதி கலா எனக்கு என்ன உறவு முறை என்றால், அவர் என் மனைவி ஆவார். வாதிகள் மொத்தம் எத்தனை நபர்கள் சேர்ந்து எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால், மொத்தம் ஐந்து நபர்கள் சேர்ந்து எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளனர். மேற்படி ஐந்து நபர்களில் யார் இறந்துவிட்டார் என்றால், செம்பாயி என்பவர் இறந்துவிட்டார். அவர் 2ம் வாதி ஆவார். மேற்படி செம்பாயிக்கு எத்தனை வாரிசுகள் என்றால், மூன்று வாரிசுகள் ஆவர்கள். யார் யார் என்றால், 1. முருகேசன், 2. தமிழ்செல்வன், 3. ராஜேஸ்வரி ஆகியோர்கள் ஆவர்.

2) வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால், நான் 50வருடங்களாக குடியிருந்து வரும் சொத்தை அவர்களுடைய சொத்து என கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். நான் என் பிரமாண பத்திரிக்கையில் அ.வ.எண்.149/1968 என்ற வழக்கு தாக்கல் செய்ததாக சொல்லியுள்ள நிலையில், மேற்படி வழக்கு குறித்து எனக்கு தெரியுமா என்றால், கேள்விப்பட்ட வகையில் தெரியும். அதற்கான தீர்ப்பு நகல்களை தாக்கல் செய்துள்ளோம்.

3) மேற்படி 50 வருடங்களாக நான் அனுபவித்து வருவதாக சொல்லும் நிலத்திற்குரிய கிரய பத்திரம் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சொத்தை எந்த வருடம் கிரயம் பெற்றேன் என்றால், 2009ம் வருடம் கிரயம் பெற்றேன். சொத்தின் சர்வே எண் என்னவென்றால், ச.எண்.848/1A ஆகும். மேற்படி சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால், என் பெயரில் 0.6-1/4 சென்டும், என் மனைவி பெயரில் 2.90 சென்டும் தனித்தனியாக கிரயம் பெற்றுள்ளேன்.

4) வாதிகளின் தந்தை காளியப்பன் ஒரு அம்புரோஸ் பிள்ளை மகன்களான ரத்தினம் மற்றும் அருள்சாமி ஆகியோர்களிடமிருந்து கடந்த 01.10.1980ம் தேதியில் சர்வே எண்.848/1ல் 2.50 ஏக்கர் நிலத்தை ரூ.5000/-ற்கு பதிவு கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி அ.வ.எண்.149/1968 என்ற வழக்கில் என்ன தீர்ப்பு வழங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், மேற்படி தீர்ப்பின்படி சர்வே எண்.848/1A ல் 0.31 செண்ட் நிலம் ஊர் நத்தமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விவரம் மட்டும் எனக்கு தெரியும்.

(வாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.